T-UN-530

'வேதாந்த தீபிகை' மறுபதிப்பு.

ஸ்ரீ:

ஸ்ரீ கோமளவல்லீநாயிகாஸமேத ஸ்ரீ ஸர்வாபீஷ்டப்ரதவரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஆராவமுதாழ்வான் வைபவம்.

(ஸ்ரீ. உப. இளையவல்லி ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி.)

சென்னை:
சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ்.
1927.

ஸ்ரீ ஆராவமுதாழ்வான் வைபவம்

சுத்தாசுத்தாதி பத்திரிகை.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
1	6	ஸம்ஹோஉ	ஸம்ஹோஜ
ஷை	8	ரிவரிவ	ரிவரவ
ஷை	14	ருய்ம்மின்	ருய்மின்
2	12	லாம்முடனுய்	லாமுடனுய்
ஷை	26	ஸாரஸூத	ஸாரஸூஜ
3	13	அடியேனு	அடியனு
ஷை	ஷை	முந்தர	முந்தற
ஷை	17	விலவெஸ	விமிவெஸ
ஷை	24	நோகத்தக்கது	நோக்கத்தக்கது
4	1	நீலம்	நீல
ஷை	2	சூழ்புனல்	சூழ்புனல் சூழ்
ஷை	12	இவ்வழகு வேறு இது திவ்ய	இவ்வழகு வேறு திவ்ய
5	1	எனபதாலும்	என்பதாலும்
ஷை	22	பெருமை என்பதை ஒட்டி உத்தம் வைகுண்டநாயக நஸம்ஸ்ருஷ்டி ஸந்நிஹிதஸ்தே பிறகு ஸாயம் தடாகே ஸ்ரீ த்ரு வாக்யம்	
7	15	ஸாம்ஶீ	ஸாஜீ
ஷை	28	வாய	வாய
ஷை	31	உஉக	உஉநு
ஷை	34	56 ம்	51 ம்
8	2	அபேதம்	அபேதம் தோற்ற
ஷை	4	நினைவன்றே வந்தது	நினைவன்றே திருவுள்ளத்தில் ஊற்றிருந்து வந்தது
ஷை	11	ஸ்ரீஜயிஸ்வா	ஸ்ரீஜயிஸ்வா
13	2	இப்படித்தான்	இப்படிதான்
ஷை	24	பணித்தமிழ்	பணித்த தமிழ்
ஷை	30	வாயந்த	வாய்ந்த
ஷை	31	கறுநெடுங்	கருநெடுங்
14	8	வினுலுய்ய	னுவினுலுய்ய

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
15	10	ளிகந்திட்டு	ளிகழ்ந்திட்டு
ஷடி	26	மறையான	முறையான
ஷடி	,,	சாற்றுமறை	சாற்றுமுறை
ஷடி	27	ஒரு தேசம்	ஒரு திவ்யதேசம் [றை
16	28	யாவராலுங் குறை	யாவராலு மொன்றுங் கு
17	1	என் கஷ்டம் போக்கு வாய் களைகண்	என் கஷ்டம் போக்குவாய் அன்றேல் களையா தொழிவாய். என்கஷ்டம் நிவர்த்தி செய்யாதொழிவாய் களைகண்
ஷடி	11	ஸத்தியமாக்கிற	ஸத்தியமாக்கின
ஷடி	14	வைபவணைத்த	வைபவத்தை
ஷடி	16	நிற்கா	நிற்க
ஷடி	30	கொப்பூழ்	கூழ்ப்பு
18	26	குடியடியார்க்கொ	குடியடியார்க்கே
19	13	தழலுழழ்வாய்	தழலுமிழ்வாய்
20	5	திரைதும்ப ஆவாதென்று	திரைததும்ப ஆவாவென்று

ஸ்ரீ:

ஸ்ரீ கோமலவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ ஸார்ங்கபாணி பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஆராவமுதாழ்வான் வைபவம்.

[இளையவில்லி தி. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

த்ரிம்சத் த்ரிகோடி வஸுருத்ர திவாகராதி
தேவாதிதேவ முனிஸங்க ஸுஸேவ்யமானம் ।
ஸம்ஹோத்ர ஸம்ஹவ ஸுதாஸுவ பீயமானம்
வந்தே பராத்பர விஹார ஹேமகிரி ஸார்ங்கபாணிம் ॥

" இற்பிறப் பறியீ ரிவரிவ ரென்னீ
ரின்னதோர் தன்மையென் றுணரீர்
கற்பகம் புலவர் களைகணென் றுலகில்
கண்டவா தொண்டரைப் பாடும்
சொற்பொரு ளாளீர் சொல்லுகேன் வம்மின்
சூழ்புனற் குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் பாடிநீ ருய்ம்மின்
நாராயண வென்னும் நாமம்." பெ. தி. 1-1-7.

ஸ்ரிய:பதியாய், அவாப்த ஸமஸ்த காமனாய், அநந்த கருட விஷ்வக்ஸேநாதி நித்யஸூரி ஸம்ஸேவ்யமாந சரண நளிநனாய், பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மங்காதுஞ் சோராமே, தனிக்கோல் செல்ல வானுய ரின்பம் மன்னி, திருமகள் மணமகள் நீளை முதலா வெல்லாத் தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்க " யாயோத்யேதி பராஜிதேதி விச்ருதா நாகம் பரேண ஸ்திதா " என்றும், " தத்விஷ்ணோ: பரமம் பதம் " என்றும் " தமஸ: பரஸ்தாத் " என்றும் சொல்லப்படுகிற கலங்காப் பெருநகரில் கௌஷீதகீ ப்ராஹ்மணாதிகளில் ஸஹஸ்ர ஸ்தூணாதி வாக்யங்களாலே ஓதப்படுகிற திருமாமணி மண்டபத்தில் " நிவாஸசய்யாஸந " என்றும், 'சென்றால் குடையா' மென்னுங் கணக்கிலே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்ய கரணத்தாலேயே சேஷனென்று காரணப் பெயருடைய திருவநந்தாழ்வா னாகிற திருப்பள்ளி மெத்தையிலே செல்வம் மல்கி வீற்றிருந் தருளும் எம்பெருமான் "உபரிவர இவ சாச்வத:" என்கிற

படி தன் கௌஸ்துப ஸ்தாநீயர்களான ஸகல ஜீவர்களும் நித்யஸூரிகளைப்போலே நிரவதிக மஹாநந்த பூர்வக ஸ்வகைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு இட்டுப் பிறந்து வைத்தும், அதை யிழந்து ப்ரளய காலத்தில் ப்ரக்ருதியில் லயித்து, உறைமெழுக்குப் பொன் போலே அநுபயுக்த ஸ்வரூப ஸ்வபாவர்களாயிருக்கு மிருப்பைத் தான் கண்டு “ஸுவிஷவிஸிஷாறு வூஸூயெ ஜஸூநவளொகஷு ஜாத நிவெூஷா” என்கிறபடி தயமாந மநாவாய் சாஸ்த்ரீயங்களான தன் கைங்கர்யங்களைச் செய்து உஜ்ஜீவிக்கவேணுமென்று கர சரணாதிகளைக் கொடுத்தவிடத்திலும் ஆறு கடக்கக் கொடுத்த தெப்பத்தை அவ்வாற்றின் நீர்வழியே கொண்டுபோய்க் கரை யேறாமல் ஆவாரார் துணையென்றலைநீர்க்கடலு ளழுந்தும் நாவாய்போல் பிறவிக்கடலுள் கிடந்து துளங்குகின்ற சேதநர்கள் பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்பும் இந்நின்ற வின்னீர்மை யினி யுறாது, ஒழிவில் காலமெல்லாம் முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்து வாழலாம்படி உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளமாய் “ஸஂஜஜ்ஞேஊநுஷெஷெ்ராகெ என்றும் “ஷெவகீ வஸுவெூஸஂயூாயா ஊவிஹூஸுதழ” என்றும் சொல்லுகிறபடியே மநுஷ்ய ஸஜாதீயனாய் வந்து அவதரித்து, இடக்கை வலக்கை வாசியறியாத இடையர்கள் முதலானோர் நடுவில் கலந்து பரிமாறியும், தான் தாழநின்று தன் ஸௌலப்ய குணத்தை நன்கு வெளிப்படுத்தி, பின்னானார் அறியாவண்ணம் தீர்த்தம் ப்ரஸாதித்துப் போன விபவாவதாரங்கள் போலன்றிக்கே, “ஸஅூூஸூவஷூ ஸஹிஷ்ணூஅூகவராயீநாவிரூாதூ ஹூிதிঃ” என்றும், “தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே” என்றும், “நெஞ்சினால் நினைப்பான் யெவ னவனாகும்” என்றும் சொல்லப்படுகிற அர்ச்சா ஸமாதி யுக்தனாய் அதிலும் புனங் காக்கின்றவர்கள் அந்த அந்த புன மத்பங்களில் வந்து குடில்கட்டி வஸிக்குமாப்போலே இந்த லீலாவிபூதியில் அர்ச்சாரூபியா யெழுந்தருளி இருக்கும் திவ்யதேசங்கள் பலவற்றுள், “யொநுஃ கூஂஹவொணெஷூி நக்ஷூணாஊூஉவிதிஷ்டதி। கஙஷூஷஹூூ மெகெவஞூஂ கிஊூதாநூா விஹூிதயঃ॥” இத்யாதி பரஸ்ஸஹஸ்ரங்களான ப்ரமாணங்களால் கொண்டாடப்படுகிற இத்திருக்குடந்தை திவ்யதேசத்தில் ஸ்ரீ ஆராவமுதாழ்வான் ஸ்ரீ பூமி நீளா கோமளவல்லீ நாயிகா ஸமேதனாய், அநந்த கருட விஷ்வக்ஸேந பராங்குச பரகால பக்திஸார யதிவர ஸ்ரீநிகமாந்த தேசிகாதி ஸஹிதனாய் ஸர்வாதிசாயியாய் ஸர்வாபீஷ்ட பலப்ரதனாய் விளங்குகின்றானென்பது யாவருமறிந்த விஷயமே.

அவன் பெருமையை ஆராய்ந்து பேசுமிடத்து “எல்லையிலாத் பெருந் தவத்தோரும் தொல்லை யஞ்சோதி நிலைக்குங்காலென்சொல் லளவன்று,” என்றும் “நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந் தூகும்” என்றும் “சூழ்த் தமரார் துதித்தா லுன் தொல்புகழ் மாசூணாதே” என்

றும், "உன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும் பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டும்" என்றும். "குடந்தைமேய குருமணித் திரளைப் புகழுந் தொண்டர் என்சொல்லிப் புகழ்வர்தாமே" என்றும் இப்படியாயிற்று தளர்ச்சியுறுவது. அங்ஙன மிருக்க, அறிவிலா மனிசரின்கண்ணும் மிகவு மறிவிலியான வடியேன், அவன் பெருமை பேசப் புறப்படுவது எங்ஙனம் கூடும்?

ஆனதால் பிரும்மாதி தேவர்களும் ரிஷிகளும் ஆழ்வா ராசார்யர்களும் ஸ்ரீ ஆராவமுதாழ்வானைக் கொண்டாடின ப்ரகாரங்களை உள்ளபடியே அநுபவித்தவர்களான பெரியோர்களால் அடியேனுக்கு உபதேசிக்கப் பெற்றதில் அடியேன் க்ரஹித்த சில அம்சங்களை வெளியிடுகிறேன்.

மற்றைப்படி எல்லா திவ்யதேசத்து எம்பெருமான்களிடத்தும் அடியேனுக்குப் பக்தி விச்வாஸாதிகளில் யாதொரு தாரதம்ய மில்லையே யாகிலும் இவ்வெம்பெருமான் திருவடி நிழலின் கீழ்க் குடிபடியனா யிருக்கு மிப் பேறு பெற்றுரில் அடியேனு மொருவனானதால், முந்தா அவன் பெருமை பேசுவதில் ஓராசையால் இங்ஙனம் ப்ரவர்த்தித்தே னல்லது வேறில்லை யென்பதையும் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

இவ்விஷயத்தில் "ஸ்வ ஏவ ஸ்வ விஹவம் அணுகல்கூரி ஸாஹ்ண: । ஸ்யாத்வகுந்த நிவஸ்ந்யா ஹாரணம் யாவிருவேத்வெகு" என்று மிரே ஒரு அபியுக்தர் ஓரிடத்தில் உதாஹரித்து மிருப்பது.

"தைவம் ஸாஜு்யம் விஷ்ணும் யெவ்ரஜந்தி பராயணம் ।
ந தேஷாம் புநராவ்ருத்தி ஜாயதே கல்பகோடிஷு ॥"

என்கிற வாமந புராண ச்லோகமும் இவ்வெம்பெருமானையே நிர்த்தேசிக்கிறது. இச்லோகத்தில் சக்ரதர மென்றாவது கதாதர மென்றாவது பொதுவாய் வ்யவஹரித்தலை விட்டு, விசிஷ்ய சார்ங்கதர மென்று ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது நோக்கத்தக்கது.

தைவம்—தேவமென்று ச்ருதியாய் "தத்தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி: ஆயுர்ஹோபாஸதே அம்ருதம் விஹாதி. ஸுர்யஶத: பரோ ஜ்யோதி ஜ்யோதி தீப்யதே, நாராயண பரோ ஜ்யோதி:" என்றும், "நிறைந்தசோதி வெள்ளம் சூழ்ந்த" என்றும், "சோதி வெள்ளத்தினுள்ளே யெழுவதோ ருருவென் னெஞ்சுள் ளெழும்" என்றும் சொல்லுகிறபடியே நிரவதிக தேஜோரூபனா யிருக்கு மிருப்பை யன்றோ வெளியிடுகிறது? இப்படியுள்ள தேஜஸ்ஸை ஸேவித்த கவியனும்,

"தோடவிழ் நீலம் மணங்கொடுக்கும்
சூழ்புனல் குடந்தைக் கிடந்த
சேடர்கோ லென்று தெரிக்கமாட்டேன்
செஞ்சுட ராழியுஞ் சங்குமேந்தி
பாடக மெல்லடி யார்வணங்கப்
பன்மணி முத்தொ டிலங்குசோதி
ஆடகம் பூண்டொரு நான்குதோளும்
அச்சோ வொருவ ரழகியவா!" [பெ. தி. 9-2-2.]

என்று கொண்டாடி யிருக்கிறார்.

ஶார்ங்கம்—மற்ற ஆயுதங்கள் ஏந்தின அழகுபோலே யன்று காணும் சார்ங்க மேந்தின அழகிருப்பது. விற்பிடித்த கையுந் தானுமான இவ்வழகுவேறு. இது திவ்யதேசத் தெம்பெருமான்கள் ஒருவரிடத்து மில்லையிறே. ஸஹஸ்ரநாமத்தில் நிகமந ச்லோகத்தில் 'ஶார்ங்கதந்வா' என்கிற பதநமும் யதார்த்தமாக வானது இவ்விடத்திலன்றோ? "ஶங்கப்ருந் நந்தகீ சக்ரீ ஶார்ங்கதந்வா கதாதர:" என்றால் உபசார உக்தி யன்றியில் உள்ளது உள்ளபடி ஓராயுதத்தாலும் குறைவின்றி தோற்றுகிறவர் இவ்வெம்பெருமானே யன்றோ? ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஶார்ங்கதந்வா இத்யஸ்ய வ்யாக்யாநே பகவத்பாஷ்யகாரஸ்ய தைச: இந்த்ரியாத்யஹங்காராத்மகம் ஶார்ங்கம் நாம தநு: அஸ்ய இதி —என்று வ்யுத்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இத்தையிறே ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனும் "ஆங்காரங்கள் சார்ங்க" மென்றதும்; இப்படி அஹங்காராத்மகமான வில்லை அடக்கியாளுபவன் இவனே யன்றி வேறில்லையிறே. இவ்விஷயத்தில் பரதத்வ நிர்ணயம் பண்ணிப்போந்த ஸ்ரீ விஷ்ணு சித்தரும் ஸஹஸ்ரநாமம் முழுவதும் ஸ்ரீமதபர்யாப்தாம்ருத ப்ரதிபாதகமென்றுள்ள அர்த்தத்தைக் கருத்தில் கொண்டு திருப்பல்லாண்டு பாடுமளவில், 'ஆயிரநாமஞ் சொல்லி' என்றும், இறுதியில் 'சார்ங்க மென்னும் வில்லாண்டா' னென்றும் அருளிப்போந்தார்.

இப்படிப்பட்ட எம்பெருமானை அடைவதால் அவர்களுக்கு யமலோகம் கிடையா தென்பதும், அவர்கள் நகரத்தில் வீடு பெற்றாரில்லை யென்னுமிடமும் "ப்ருஹஸ்பதே உபோஷ்யாத: ஸர்வபாதக ஸஞ்சய: | கும்பகோணே ஶயாநஸ்ய விஷ்ணோ ர்நமஸ்யந்தி ஶார்ங்கிண:" என்றும், "அஷ்டோத்தர ஶதஸ்தாந வரேஷ்வதிஶயோத்தமம் | விஷ்ணோஸ் ஸ்தாநம் பரம் கும்பகோணஸ்த அக்ருணி | ஸர்வபாதக தாதஸ்ய ஸம்ஸித்தி ஸாதனம் | ப்ருஹஸ்பதே உபோஷ்ய ஶ்ரோணஸ்த உபஸ்யா | வீரஹத்யாதயஶ்சைவ பாபஹத்யாதய ஸ்தயா | நமஸ்ய ஶார்ங்கிணோ உபஸ்தாநாத் ஶார்ங்கபாணிந:" [கும்பகோண மாகாத்ம்யம்.

8-ம் அத்யாயம்] என்பதாலும், "[illegible]" [கும்பமாஹா 52 அத்.] என்பதாலும், "[illegible]" என்றும், "[illegible]" என்கிற ப்ரமாணங்களாலும் ஸுஸ்பஷ்டம்.

ஸ்ரீ ரங்கநாதனும் ஸ்ரீ ஆராவமுதனும் ஒருவரே என்னுமிடம், "[illegible]" [கும்ப மாஹா 48 ம் அத்.] "[illegible]" [கும்ப. மாஹா. 49-ம் அத்.] என்பவற்றால் விளங்கும்.

அவன் திருக்குடந்தைக்கு எழுந்தருளின பெருமை, "[illegible]

[illegible] ॥ ''
என்னும் ச்லோகங்களால் அறியலாகும்.

இந்த க்ஷேத்ரத்துக்குக் கும்பகோண மென்று பெயர் வந்ததை
'' [illegible] ॥ '' [கும்ப மாஹா. 12-ம் அத்.]
என் பதனால் காணலாம்.

இவ்வெம்பெருமானுக்கு அபர்யாப்தாம்ருதன் என்று பெயர் வந்தது,
'' [illegible] ॥ '' என்பதாலும்,
இங்குத் தக்ஷிணபத உத்தராயண தேவதைகள் ஸமத்வம் பெற்றமை,
'' [illegible] ॥ '' [கும்ப. மாஹா.
30-ம் அத்] என்னும் ச்லோகங்களாலும் விவக்ஷிதம்.

இவ்வெம்பெருமானைக் காட்டிலும் சக்ரராஜன் வேறுபட்டவ ரல்ல
ரென்னுமிடம், '' [illegible] ॥ '' [கும்ப மாஹா
61 ம் அத்] என்பதால் விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த க்ஷேத்திரம் வைகுண்டம் என்று தோற்ற ஸ்ரீ ஆராவமுதன்
ஸந்நிதிக்குள் மண்டபம் திருமாமணி மண்டப மென்று வழங்கப்பட்டு வரு
கிறது.

மற்று முள்ள இடங்களில் ப்ரபந்நர்களுக்கு மாத்திர மன்றோ எம்
பெருமான் தன்னுடைச் சோதிக் கெழுந்தருளும் விஷயத்தில் '[illegible]

தேவி உக்ஷிணே।' என்றும் 'நன்னில மாமது நற்பக லாமது நன்னிமித்தம் என்னலு மாமது' என்று, அயந த்வயத்திலும் உத்க்ராந்திக்குப் பெருமை பேசப்பட்டிருக்கிறது. இங்கு அப்படி "யன்றியில் நற்பா லயோத்தியில் வாழும் சாரசரம் முற்றவும் நற்பாலுக் குய்த்தனன்" என்கிறபடியே இத்திவ்யதேசத்தில் எத்தனையேனும் தண்ணியதான ப்ராணிகளுக்குங் கூட அயந த்விதய உத்க்ராந்தியிலும் யாதொரு பல வைஷம்ய மில்லாமை தோற்றி இருக்கிறது. இந்தப் பெருமை தோன்ற அர்ச்சனையில் இன்றளவும் 'ஊயநவிதயொக்ராஞ ப்ராணிஶோக்ஷ ப்ரதாயகாய நமஃ' என்று வழங்கப் பட்டு வருகிறது. இந்த ப்ரஸித்தியை யெல்லாந் திருவுள்ளம்பற்றியே ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனும் 'ஆராத வருள முதம் பொதிந்த கோயில் என்று அதாவது இவ் வைதிக விமாந அதிஷ்டாதாவான ஆராவமுதன் ப்ரதிஷ்டிதனா யிருந்த ஸ்தாநம் ரங்கவிமாந மென்று திருவரங்கத்தை அருளிச்செய்தார். அருளமுதம், தயையே அமுதவடிவு கொண்டு வந்தமை தோன்ற, தயாசகத்தின் இடையே "கரூணெ உ௱ிதெஷு ஶாஜகெஷு ப்ரதிகாராஞர உ௲ஜ௳யெஷுவிஞஃ। கவஅரயி தயா க்ஷயெ வஶாம்ஶீ விஜயஷுாந ஊவாஶ்ரிதெ வ்ரஷாத்ரிம்॥" என்றும், இறுதியில், "ஶதக ஶிஉஊஉாஶம் ஷஶ்யமஷ்யஷ்ய ஶாநாமு வ்ரஷகிரி ஊயிஶுஹ்ய வ்யக்தஶாலொ கயஞீ। சுநிதர ஶரணாநா ஶாயிராஜெ்ய ஹிஷிஞெ ஹுஶித விஶதவக்ஷா ஶாம்ம௳யநாநு கும்வா॥" என்றும் இவ்வெம்பெருமான் தயாகுணத்தை யன்றோ ஸ்துதி விஷயமாய் வைத்துக் கொண்டாடி யிருக்கிறார்.

இவ்வெம்பெருமானும் ஸ்ரீநிவாஸனும் அபிந்நர் என்னுமிடத்தை "ப்ஹொ௱வாஅ—ஊுநிநா ஷம்ஷ்து௲தொ தெஉவஶ்ஶாம௳ வாணிரயொக்ஷஜஃ। ஶெவ மம்ஹீஶயாவாஅா ப்ஹஷமு வாக்ய ஊப்ரவீக। ஸ்ரீ ஹமவாமு॥ ஊுநிஶ்ரெஷ்஠ ஊஹாஹாம க்ஷஶிஶித்த தயாக்ஷியம்। க்ரொயெந ஊஹதா விஷா மதா கொஹு வஶும் ப்ரதி। தத்க்ஷும் உத்ஷாதெந மஹொஹூ ஜீஷிஷத்தஃ। தநொஶாஉ ப்ரஷாதெந ஊுநிவஶுத்க்ஷ ஶாமதஃ। தத்ராவி உத்ஷாதெந சுஷ்க்ஷெத்ரெ ஶுஹாவஹெ। ஊயம் வஶுதீ ப்ஹுவாய தயாக்ஷம் தவஷிஷ்தஃ। ஶெஷாஅஶாஹியம் விஷ்ணு ஹிஶித்தீகஜதூ ஆமதா। ஷொவிவாதாஊ ஹாமெது ஷம்ஹுதொஉ்யாவி உரஶயதெ। வாதாஊ வெங்கடாஶீஶம் ஷக்ரஆ யஷ்து வஜுதி। உஶ௳நம்வாவிக௱ு௱ுதெ நெவெஉ்யம் வாயஷம் உஉக। ப்ரதாவிதம் வாயக்ஷீரம் ஶஶூஶக௳ரயாஙிதம்। யொஅ௳யெக தூஊஷீவமெ்த்ரெ ஷ்ஷ்வுஷீஉதி நாநிய்யா। தஷெதூ வெங்கடாயீஶெ ஊஶாஹெஷெ விஜொத்தஃ। ஷவஜாமு காஶாந வாவ்யாஶு சுஜெவெகுஶு உஶ்நுதெ।" [கும்ப. மாஹா 56-ம் அத்.] என்று ஸ்ரீ சார்ங்கராஜனே அருளிச் செய்திருக்கிறார்.

பின்னும் ரங்கநாத பாதுகா ஸஹஸ்ரம் பண்ண ஆரம்பித்த ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுக்கு இரண்டு எம்பெருமானுக்கு முள்ள அபேதம் இடையிடையே 'ஶார்ங்கிண: வாமபக்ஷே' என்று இந்த அர்ச்சாவதாரத்தின் நினைவன்றோ வந்தது.

தவிரவும் ஸங்கல்ப ஸூர்யோதயம், மூன்ருவது அங்கத்தில் விவேகன் ஸுமதியைப் பார்த்துச் சொல்லுமிடத்தில், 'குழந்தாய்! அல்லாத மார்க்கங்களிலே போக்கு வரத்து நேரிடுமோ என்று நீ கலங்காதே; பரம புருஷார்த்தமான மோக்ஷோபாயத்தை ஒருத்தனை வ்யாஜமாக இட்டு உபதேசித்த கண்ணன் சரணாகதர்களான நம்மைக் கைவிடாது சார்ங்கதரனாய் வந்து நம்மை ரக்ஷிக்கிறான்' என்னுமதைச் சொல்லுமிடத்து, "ஸந்தித வத்வீஹி ஸ்தீஹயிக்வா வ்யாஜதாத்யு ஸமுதிஶாஸ்த்ரே ரஹஸ்யவாஸ்ய விஷாஸே: । உபநிஷத் ஸாராஸ்ய அஜஹத்வாவி முக்ஷைஸ்ய ஶரண ஸவமதா ஹஸ்தாயதே ஶாம்மத்யநா" என்று இவ்வெம்பெருமானை அஸாதாரண சிந்நத்தைக் காட்டி யன்றோ புகழ்ந்திருக்கிறார்.

தொட்டயாசார்ய க்ருத வைபவ ப்ரகாசிகையில், (85-வது ஶ்லோ) "ஸ்ரீ காஞ்சீஹஸ்தோண ப்ரஹ்ருதீந் விஷ்ணுராஜ்யாதாநீ ஶோபைஷ ஸதோஹராணி । மக்வாப்ரணஸ்ய ஸூரிஸேவநாயெஷாய: ப்ராவகாஞ்சீந மஶம் ஹஜேதம் ॥" என்கிற சுலோகத்தில் ப்ரகாசமாக ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் திருக்குடந்தை முதலாக வுள்ள திவ்யதேசத்துக்கு எழுந்தருளி யிருக்கிறாரென்றிருக்க, யாரோ சிலர், ஸ்ரீதேசிகன் இங்கு எழுந்தருளி மங்களாசாஸநம் செய்தருள வில்லையென்று சங்கிக்கு மதுவும் மிகவும் பொருந்தாததே.

ஸ்ரீ தேசிகன் திவ்ய ப்ரபந்தத்தின் உட்கருத்தை அறிந்து அதன் முக்கிய விஷயங்களைக் கருத்தில் வைத்து ப்ரபந்தஸார மென்று ஒரு ப்ரபந்தம் அருளிச்செய்தும், நாலாயிரத்தின் கண்ணும் ஸாரதமமான திருவாய்மொழிக்கு ஸார நிஷ்கர்ஷ ப்ரதிபாதகமாக த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளீ அருளிச்செய்ததில் ஆராவமுதன் பெருமையும் தெரிந்துதானே அருளிச்செய்திருப்பர். ஆராவமுதன் விஷயமாகத் தனித்து ஒரு ஸ்தோத்ரம் முதலியன அருளிச்செய்யாமையே, அவர் மங்களாசாஸநம் பண்ணவில்லை யென்பதற்குக் காரண மென்றால், உடையவர் முதலானோர் ஸ்ரீ வரதராஜனை மங்களாசாஸநம் பண்ணி யிருக்கிறாரென்று கேட்டிருக்க, அவர் விஷயமாக ஸ்தோத்ரம் செய்யாமைபற்றி உடையவர் முதலானோர் வரதராஜனை ஸேவிக்கவில்லை யென்று சொல்ல முடியுமா? தேசிகனும் ஒவ்வொரு காரணம்பற்றியே ஒவ்வொரு இடத்திலும் ஸ்தோத்ரம்

அருளிச்செய்தாரே யன்றி, உகந்தருளியுள்ள தேசத்துக் கெல்லாம் ஸ்தோத்ரம் அருளிச்செய்யவில்லை யன்றோ? ஸ—ூக்தி ஏற்படாத ஸ்ரீமுஷ்ணம் திருநாராயணபுரம் முதலிய ஸ்தலங்களை தேசிகன் மங்களாசாஸநம் பண்ணவில்லை யென்று ஏற்பட்டுவிடுமா? ஆனதால் தேசிகன் இங்கு எழுந்தருளி மங்களாசாஸனம் பண்ணவில்லை யென்று சொல்வது, ஸ்ரீ ஆராவமுதனை அநுபவிக்காத ஒரு குறையை தேசிகனுக்கு ஏற்படுத்துவதாகுமே யன்றி வேறில்லை. இது நிற்க, ப்ரதி ஸம்வத்ஸரமும் தைப்புற் புனிதன் உத்ஸவ அவப்ருத திநத்தன்று ஸ்ரீ ஆராவமுதாழ்வான் பஞ்சாயுததரனாய் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளும் ஸமயத்து அவனை கண்ணாரக் கண்டு ஸேவித்தவர்களுக்கு ஆராவமுதாழ்வான் திறத்து, தேசிகன் விசேஷமாக ஈடுபட்டவரே என்பதும், அது தோன்ற தேசிகனிடம் அவனுக்குள்ள க்ருபா விசேஷமும் பண்டித பாமர ஸாதாரண்யேந எல்லாருக்கும் உபபாதியாமலே நன்கு விளங்கும்.

இவ்வெம்பெருமான் குடந்தையின்கண் "வெதைெஷ்ஸவெ-ஃ ஈஹ ஜெவ வெ௨ஷ்ஃ" என்பதன் அர்த்தத்தை எல்லாரும் அறியும் வண்ணம், ஸ்ரீ ஆராவமுதன் வைதிக விமாநத்தின் நடுவே எழுந்தருளி இருக்குமதுவும் மஹார்ஹமான ரத்நஹாரத்தின் நடுநாயகம் போலன்றோ விளங்குகிறது. அதாவது இத்திவ்ய தேசத்துக்கு அணித்தாக நான்கு பக்கங்களிலும் திருவிண்ணகர், திருநறையூர், தண்சேறை, நந்திபுரவிண்ணகரம், கூடலூர், கவித்தலம், புள்ளம்பூதங்குடி, ஆதனூர், திருவெள்ளியங்குடி தொடக்கமாக உள்ள ஒன்பது திவ்யதேசத்து எம்பெருமான்க ளன்றோ நவரத்ந மணிகள் போலச் சூழ்ந்திருக்கின்றனர். ஆழ்வார்களில் பெரியாழ்வார் என்பவர் தமது ப்ரபந்தாரம்பத்திலேயே "சூஙிவஞ ஶிவாகாஃர ஊவஷஹ்ய ஊஹஃநஃ" என்னுமாப்போலே ஸ்ரீ ஆராவமுதாழ்வான் விற்பிடித்த கையுந் தானுமான அழகு தோன்ற நின்றமை கண்டு, "சார்ங்க மென்றும் வில்லாண்டான் றன்னை" என்று அவனைப் பல்லாண்டு பாடியும், அவன் கண்ண னென்றபடி தோன்றத் தாலாட்டியும், சங்கம் பிடிக்கும் தடக்கையை நினைந்து 'கோல் கொண்டுவா' வென்று அழைத்தும் மங்களா சாஸநம் செய்தருளி யிருக்கிறார். சங்கம் பிடிக்கும் தடக்கையை அத்யாபி ஸேவித்தாலும் சங்கமானது எம்பெருமான் தோளில் செவியின் கீழ்த் தாழ்ந்து இருக்கு மிருப்பு, இவர் திருமகளாரான ஸ்ரீ கோதாபிராட்டியின் அருளிச் செயலான

"சந்திர மண்டலம்போல் தாமோ தரன்கையில்
அந்தர மொன்றின்றி யேறி யவன்செவியில்
மந்திரம் கொள்வாயே போலும் வலம்புரியே!
இந்திர னுமுன்னோடு செல்வத்துக் கேலானே" [நாச். தி. 7–4.]

என்றும் பாசுரத்தை அந்வர்த்தமாகச் செப்கிறது. ஆனதால் சார்ங்கம் பிடிக்கும் பெருமை எப்படி மற்ற எம்பெருமான்களிற் காட்டில் அழகிதோ அப்படியே சங்க மேந்தும் பெருமையும் அழகிது.

மற்றும் இப்பிராட்டி, இவ்வெம்பெருமானோடு கலவியி லுள்ள ஆதராதிசயம் தோன்ற "பீதகவண்ண வாடைகொண்டு என்னை வாட்டம் தணிய வீசீரே" என்றும், "குடந்தைக் கிடந்த குடமாடி, நீலார்தண்ணந் துழாய்கொண்டென் நெறிமென் குழல்மேல் சூட்டீரே" என்றும், "அமுதவாயி லூறிய நீர்தான் கொணர்ந்து புலராமே பருக்கி யிளைப்பை நீக்கீரே" என்றும் இப்படிப் பலபடிகளால், அவனுடைய திருமேனி ஸம்பந்தமுள்ள ஏதாவதொரு வஸ்துவின்றித் தன் ப்ராணதாரகமான வஸ்து வேறில்லையென்றும், அப்படி உங்களுக்கு என்னை ஸத்தை யுடையவளாகச் செய்ய வேணுமென்னும் நினை வுண்டாகில் அங்கே ஸம்பந்த முள்ள தொன்றைக் கொண்டுவந்து என்னை ஸ்பர்சித்து என்னை ஸத்தைபெறச் செய்யுங்கோளென்கிறாள்.

"பாலா லிலையில் துயில்கொண்ட பரமன் வலைப்பட் டிருந்தேனை
வேலால் துன்னம் பெய்தாற்போல் வேண்டிற் றெல்லாம் பேசாதே
கோலால் நிரைமேய்த் தாயனுக் குடந்தைக் கிடந்த 'குடமாடி
நீலார்தண்ணந் துழாய்கொண்டென் நெறிமென் குழல்மேல் சூட்டீரே"
[நா தி 13-2]

["கநகாபம் ஶிஶும் ஶ்லோகே ஜாதமாத்ரம் உதாரதே । ஶாகாயாம் வடவ்ருக்ஷஸ்ய" என்கிறபடியே ஆலிலளந் தளிரிலே கண்வளர்ந் தருளின ஒருவன் அகடித கடநா ஸாமர்த்யத்திற்குத் தோற்றிறே அடிமைப்பட்டதும்; அப்படி அவன் வலையிற் சிக்கிய வென்னை அல்லாதவற்றைச் சொல்லி எனக்கு மேன்மேலும் ஸந்தாப காரணமான வ்யாபாரங்களைச் செய்யாதேயுங்கள்; பின்னை செய்ய வடுப்பதென் என்னில்: ஆயனுக் கோலால் நிரை மேய்த்துச் செழுந்தெருவே ஆராரெனச் சொல்லி; சீரார் குடமிரண்டேந்திக் கூத்தாடி, அந்த ஆயாஸந் தீரக் குடந்தையில் சாய்ந்து கிடக்கிறான் ஒருவன்; அவன் பக்கல் சென்று பசுமை விஞ்சின திருத்துழாய் கொண்டு என் மெல்லிய குழல்மேல் சூட்டீரென்கிறாள்.] இப்படிப் பேசுகிறவள்தான் ஆரென்னில் "ஸ்வாத்யாயாம் ஸ்ரஜி நிர்மஸிதம் யாஸுக்தே" என்று பெற்றவளிறே. ஸ்ரீரங்கமன்னன் முதலானோரும், "விஶ்வாயத்ந ரஜஸா கதைந நாஸிகா வக்ஷஸ்ஸ்தலேச கமலாஸ்தந சந்தநேந । ஆமோதிதோபி நிஜமௌலிஷு ரங்கஸ்ரூய யத்ரேந தேந ஶிரஸா தவ மௌலிமாலாம்॥' என்கிறபடியே ஆண்டாள் சூடிக்களைந்த மாலைகள் பெற

வன்றோ படாதபாடு படுவது? அங்ஙனமிருக்க அத்தலை இத்தலையாக வாயிற்று இருப்பது. இத்தனைக்குங் காரணம் இவளுக்கு ஸ்ரீ ஆராவமுத னிடத்துள்ள கரைபுரண்ட காதலென்பதில் ஐயமுண்டோ?

இப்படி இவளுக்கு ஆராவமுதாழ்வானிடத்தில் உள்ள ஈடுபாட்டின் மேன்மை "தவஸ்த² வாஹ்ஸ்வாதி கெவி" என்கிறபடி எல்லை நிலத்தளவு மன்றோ வளர்ந்து கிடப்பது?

"சாக்கியங் கற்றோம் சமணங் கற்றோம் சங்கரனாராக்கிய வாகம நூலா ராய்ந்தோம் பாக்கியத்தால் செங்கட்கரியானைச் சேர்ந்தோம் யாம் தீதிலமே" என்றபடி ஒவ்வொரு சமயங்களினுள்ளும் புகுந்து ஸாராஸார விவேகம் பண்ணி, பரதத்வ நிர்த்தாரணம் பண்ணியருளிய திருமழிசைப் பிரானும், இவ் வெம்பெருமான் கிடந்ததோர் கிடக்கைகண்டு, அவ்வழகில் ஆழ்ந்து,

"இலங்கைமன்ன னைந்தொடைந்து பைந்தலை நிலத்துக
கலங்கவன்று சென்றுகொன்று வென்றிகொண்ட வீரனே!"

என்றாரம்பித்து அதாவது ராவணன் பத்துத்தலையும் புற்றுமறிந்தன போலப் புவி மேல் சிந்தவும் அவன் உள்ளம் பதறவும், அவனை நிரஸித்து ஜயம்பெற்ற சூரனே! என்று அவன் ராமாவதாரம் செய்தமையை நினைந்தும்,

"செழுங்கொழும் பெரும்பனி பொழிந்திட வுயர்ந்தவேய்
விழுந்துலர்ந் தெழுந்துவிண் புடைக்கும்வெங் கடத்துணின்று
எழுந்திருந்து தேன்பொருந்து பூம்பொழில் தழைக்கொழுஞ்
செழுந்தடங் குடந்தையுள் கிடந்தமாலு மல்லையே."

[திருச்சந்த விருத்தம்.–60.]

என்னுமளவாக விண்ணபித்தும் அவனொன்றும் பேசாமையாலே மேல் "நடந்தகால்கள்" என்கிறார்.

இதனால், ராமாவதாரம் பண்ணினவன் ஸ்ரீ ஆராவமுதன் என்ற திரு நாமத்தோடு அர்ச்சாரூபியாய் ஸேவைஸாதிக்கிறானென்று ஏற்படுகிறது. இவ்வர்த்தம் ஸ்ரீமத்ராமாயணம் யுத்தகாண்டம் 101-வது ஸர்க்கத்தில் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்று ஆரம்பித்த ஸ்ரீராமபத்ரனைப் பார்த்து ப்ரஹ்மாவானர் "நீ மநுஷ்யனன்று; ஆச்ரிதஸம்ரக்ஷணத் துக்காக மநுஷ்ய ஜாதீயனாய் வந்து அவதாரம் செய்தருளினையே யன்றி நீ ஸர்வேச்வரனே" என்று எம்பெருமானுடைய அவதார ரஹஸ்யத்தை நிரூபிக்குமிடத்து. "அக்ஷரம் ப்ரஹ்ம ஸத்யம்ச ... ஶார்ங்கதந்வா ஹ்ருஷீகேஶ: புருஷ: புருஷோ

தூ: ।” என்ருரிறே. அதாவது இருகைகளோடு கோதண்டபாணியாய் ஸேவை ஸாதிக்கிற நீ, நான்கு திருக்கைகளோடு கூடின சார்ங்கபாணி யன்றோ என்பது கருத்து.

ரிஷிகள் அநேகமாகப் பகவானை ஸ்தோத்திரம் பண்ணுமிடத்து “ஶம் வ சக்ர கதாதரா:” இத்யாதி பதப்ரயோகங்கள் பண்ணி யிருக்கிருர்கள். அவ்வாறிருக்க இந்த வால்மீகி பகவான் சதுர்ப்புஜத்வத்தோடு சார்ங்கதந்வத் வத்தையும் சேர அநுஸந்தித்து, அப்படிப்பட்டவனே இந்த்ரியங்களை யடக்கி யாளுபவன், அவனே புருஷன் புருஷோத்தமனென்று சொல்லத் தகுந்த வனும் அவனே என்று கொண்டாடி இருப்பதைப் பார்த்தால் ஸ்ரீ ஆராவ முதன் திறத்து இவர் அபிநிவேசம் மிக்க மேம்பாடுடைய தென்பது ப்ரயாஸ மின்றி ஊஹிக்கத்தகுந்ததாக இருக்கிறது. இதைத் திருவுள்ளத்தில் கொண்டு தான் இவ்வாழ்வாரும் ஸ்ரீ ஆராவமுதனை மங்களாசாஸனம் பண்ண வாரம் பிக்கையில் “இலங்கைமன்னனை.........வீரனே!” என்று ஸம்போதித்து, இறுதியில் அவ்வவதாரத்தில் “நடந்தகால்கள் நொந்தவோ?” என்ருர்.

வேங்கடத்துமால் குடந்தையில் கிடக்கையாவது:—மண்ணோர் விண் ணோர்க்கும் கண்ணுவானுனதண்ணர் வேங்கடவிண்ணோர் வெற்பனுன ஸ்ரீநிவாஸனும் வேங்கடாசலத்தில் உள்ள வாஸத்தை விட்டு, தேன் மிக் கிருந்துள்ளதும் ஸர்வதா பூத்த சோலைகளாலே சூழப்பட்டதும், களைப் பாறச் செவ்வியதான ஸ்தாநமாகிய குடந்தையிலே புகுந்தருளினனன்றோ?

இந்த அர்த்தம் ரிஷியாலும், “கிஞ்சைதந் ஸமாஷ்ரித்ய வ்ய ஞ்ஜேகாம்ஶதோஹரி: । வேங்கடாத்ரௌ காசிதாத்ரு வ்ருக்ஷேஷ்விதிகோர யக । உஶ்யமஜ்ஜோகமீஜாஞ்ச சுவரேணாம்ஶதோஹரி: । உக்ஷிணாத்ரி ஶமாஷ்ரித்ய வ்யயள உதஸேவத । வேமாக கவேரஜாதீர ஷ்தம் க்ஷேத்ரம் வராதநம் । க்ரம்ஹ வோணாஹியம் வர்ணம் உணகாரண்ய ஶாஶ்ரித: । ஶ்ருதாமஷ்ரா வ்ரதஜேஶம் வஶ்யநு க்ஹரோஶ்ரித: ॥ [கும்ப” மாஹா. 45-ம் அத்.] என்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

“நடந்தகால்கள் நொந்தவோ நடுங்கஞால மேனமாய்
இடந்தமெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்தகா விரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து பேசுவாழி கேசனே”

[திருச்சந்த விருத்தம்—61]

[நீ ராமாவதாரத்தில் கொடுங்கதிரோன் துன்னு வெயில் வறுத்த வெம் பரல் மேல் பஞ்சடியால் கானகத்தில் நடந்த இளைப்போ? கிருஷ்ணவதாரம்

செய்து காடுகளுக்கு போய்க் கன்றுகள் சென்ற சென்ற விடமெங்கும்போய், அவைகளை மேய்த்த இளைப்போ? அன்றேல், இப்படித்தான் ஈண்டு தாவிய அசைவோ? அன்றேல், லோகம் நடுங்கும்படி வராஹாவதாரம் பண்ணி, அண்ட பித்தியில் ஓட்டிக்கிடந்த பூமியை உத்தாரணம் பண்ணின களையோ? நீர்வளம் நிலவளம் பொருந்திய இக்குடந்தையின் கண் நீ கிடந் தருளின காரணத்தை எனக்கு நீ எழுந்திருந்து சொல்லவேணு மென்று பிரார்த்திக்க, அவ்வளவில் எம்பெருமானும் பத்துடையடியவர்க் கெளியனுகையாலே இந்த பக்திஸாரர் திறத்து அர்ச்சாஸமாதி குலே தலேயும் ஒரு பொருட்டாக எண்ணுமல் எழுந்திருக்க உத்யோகிக்க அவ்வ வஸரத்தில் இருந்த வழகு நித்யமாய்ச் செல்லவேணு மென்பதை உட் கொண்டு, "வாழி கேசனே" என்று அங்குற்றைக்கு மங்களாசாஸநம் செய்தருளினதும், அப்படியே பின்னுெரும் தன்னை அநுபவிக்க எளியனு யிருக்கு மிருப்பு இவ்வெம்பெருமானிடத்தி லன்றோ உள்ளது.

இப்படி, தன்னுடைய ஆஜ்ஞாரூபமான ஆகமாதிகளில் வ்யக்த மாய்ச் சொல்லப்பட்டிருக்கிற அர்ச்சாவதார ஸ்திதியையும் கடந்து விசேஷ பக்தி பரித வ்யக்தி விசேஷத்திலே தன்னை அழியமாறி விபவாவதா ரம்போல் ஸேவை ஸாதித்தருளின க்ரமத்தை உலகத்தார் அறியும் வண் ணம் செய்வித்ததைத் தனக்குச் செய்த உபகாரமாக நினைத்து, திருமழிசைப் பிரானென்று திருநாமஞ் சாத்தியருளினதும், ஸம்ப்ரதாய ப்ரஸித்தமிறே. பின்னும் இவ்வெம்பெருமான் பக்கலுள்ள ப்ரேமாதிசயத்தால் அன்றோ இவன் திருவடிவாரமே தமக்கு உத்தேச்யம் என்று இரண்டாயிரத்தெழு நூறு ஸம்வத்ஸரம் இங்கு யோகநிஷ்டையில் எழுந்தருளியிருந்து, தமது அவதார கார்யத்தைத் தலை கட்டிப் போந்தார்.

நாலு கவிப்பெருமா ளென்றும், மாறன் பணித் தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற வந்தவரென்றும்,

"அங்கமலத் தடவயல்சூ ழாலிநாடன்
அருள்மாரி யருட்டமுக்கி யடையார்சீயம்
கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கைவேந்தன்
கொற்றவேற் பரகாலன் கலியன்" [பெ. தி. 3-4-10.]

என்றும், பெருமைவாய்ந்த திருமங்கை யாழ்வாரும், அநாதிகாலந் தொடங்கி 'சிலம்படியுருவிற் கருநெடுங் கண்ணார் திறத்தனு யறத்தையே மறந்து, புலன்படிந் துண்ணும் போகமே பெருக்கிப் பொழுதினை வாளா' போக்கின வளவிலும், யாத்ருச்சிக ப்ராஸங்கிக ஸுக்ருத விசேஷமும் இவர் பக்கல் காணுமையாலே இவர் செய்யும் துஷ்க்ருதத்தையே பற்றாசாகக் கொண்டு,

பொன்மலையின் மீமிசைக் கார்முகில் போல் கருடாரூடனாய் எழுந்தருளின. ஆராவமுதாழ்வானைக் கண்ணாரக் கண்டு, அந்த அநுபவம் உள்ளடங் காமையால் "வாடினேன் வாடி" என்று துடங்கி அவன் பரத்வத்தைப்பேசி, அவனுடைய ஸௌலப்யம் தோன்ற

"ஆவியே யமுதே யெனநினைந் துருகியவரவர் பணைமுலை துணைபா
பாவியே னுணரா தெத்தனை பகலும் பழுதுபோ யொழிந்தன நாள்கள்
தூவி சேரன்னம் துணையொடும் புணரும் சூழ்புனல் குடந்தையே
தொழுதென் வினையுய்ய நான் கண்டு கொண்டேன் நாராயணா வென்
னும் நாமம்,' [பெ. தி. 1-1-2.]

என்று கீழில் காலமெல்லாம் ஹேயமான விஷயங்களில் கண்ணோட்டம் வைத்து, அவற்றை 'ஆவி' யென்றும், ப்ராணதாரகமான 'அமுத' மென்றும், சொல்லிச் சொல்லி நெஞ்சுருகி மஹா பாபியான நான் பகவதநுபவத்தில் செல்லக்கடவ அருமந்த காலங்களை யெல்லாம் வீணே போக்கினேன்; அப்படிப்பட்ட நானே அதே நாக்கினால் உஜ்ஜீவிக்கும் வண்ணம் 'நாராயணா வென்னும் நாமம் கண்டு கொண்டேன்' இந்தப் பெருமை குடந்தையைத் தொழுதன்றோ பெற்றதென்கிறார்.

இப்படி, திருமொழிக்கு ப்ரதிபாத்யனாக ஸ்வாமியையே வைத்து உபக்ரமித்துத் திருமொழி முழுவதையும் ஸ்வாமி விஷயமாக்கி அருளிச் செய்துங்கூட, ஆழ்வாருக்கு இவ்வெம்பெருமான் திறத்துள்ள ஆராத காதல் உள்ளடங்காமை இவர் திருத்தேரளவும் செல்ல மங்களாசாஸநம் பண்ணும்படி யன்றோ கரை புரண்டோடியது.

திருமொழி முழுவதும் ஆராவமுதன் விஷயமென்பதற்கடி என் என்னில்: "𑌉𑌪𑌕𑍍𑌰𑌮𑍋𑌪 𑌸𑌂𑌹𑌾𑌰𑌾 𑌵𑌭𑍍𑌯𑌾𑌸𑍋𑌽𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌾𑌫𑌲𑌮𑍍 । 𑌅𑌰𑍍𑌥𑌵𑌾𑌦𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍀 𑌚 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑌾𑌤𑍍𑌪𑌰𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑍇" என்கிற ப்ரமாணத்தின்படி ப்ரபந்தாரம்பத்தில் "சூழ்புனல் குடந்தையே தொழுது" என்று உபக்ரமித்தும், இடை இடையே பத்துக்கள்தோறும் ஸ்வாமியின் திருவுருவை நினைந்தே மேல்மேல் மங்களாசாஸந ப்ரவ்ருத்தரா யிருக்கிறபடியையும்

"வந்தநாள் வந்தென் னெஞ்சிடங் கொண்டான்
மற்றோர் நெஞ்சறியா னடியேனுடைச்
சிந்தையாய் வந்து தென்புலர்க் கென்னைச்
சேர்கொடானிது சிக்கெனப் பெற்றேன்

கொந்துலாம் பொழில்சூழ் குடந்தைத்தலைக்
கோவினைக் குடமாடிய கூத்தனை
எந்தையை யெந்தை தந்தை தம்மானை
எம்பிரானை யெத்தால் மறக்கேனே." [பெ. தி. 7-3-3.]

என்று ப்ரதம தர்சநம் எப்போது ஏற்பட்டதோ அப்போது தொடங்கி மற்றோர் நெஞ்சையும் விஷயீகரியாமல் என் னெஞ்சை யிடமாக கொண்டான்; என் மனதும் அவனும் வேறு அன்று என்று தோற்றும்படி ஆனான்; அரவத் தமளியினோடு மழகிய பாற்கடலோடு மரவிந்தப் பாவையுந் தாமு மகம்படிவந்து புகுந்தான். வடதடமும் வைகுந்தமும் மதிள்துவாராபதியு மிடவகைக ளிகந்திட்டு என்பால் இடவகை கொண்டான். இப்படி, உபகாரக னானவனை நான் எங்ஙனே விடுவேன்? என்று தன் தன்மையைச் சொல் லியும்,

" வந்தாயென்மனத்தே வந்து நீ புகுந்தபின்னை
எந்தாய்! போயறியா யிதுவே யாமைபாதோ?
கொந்தார் பைம்பொழில்சூழ் குடந்தைக் கிடந்துகந்த மைந்தா!"
[பெ. தி. 8-9-5.]

[அவன் தானிருந்த இடந்தேடி வந்ததை நினைத்து நானிருந்தஇடம் தேடி வந்தாய், அதோடு நிற்காமல் என்மனத்தில் புகுந்தாய், அதன்பின் நித்யஸூரி கள் பக்கல் போவதாகவும் நீ நினைக்கிறதில்லை, இந்தப் பேறு ஒன்று போதா தோ?] என்று அவன் தன்னை விடாமையையும் காட்டித் தந்து, ப்ரபந்தநிகம நாவஸரத்தில் "அன்றாயர் குலமகளுக்கு" என்ற பாசுரத்தில் "தண்குடந் தைக் கிடந்தமாலை நெடியானை யடிநாயேன் நினைந்திட்டேனே"யென்று தன க்கு ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அவனல்லது செல்லா மையை வெளியிட்டு ப்ரபந்தத்தை நிகமித்ததைப் பார்க்க வேறு ஸாதநாந்த ரம் தேடி உபபாதிக்கவும் வேண்டுமோ? இப்படிப்பட்ட பெருமைதோன்ற ப்ரதி ஸம்வத்ஸரம் மார்கழிமாதம் திருவத்யயந உத்ஸவம் பகல் பத்து சாற்று மறையான திருமொழி சாற்றுமறை தினத்தன்று கலியன் ஆராவமுதன் திருவடி தொழுவ தென்கிற ஏற்றம் இந்த ஒரு தேசம் மாத்திரத்திலன்றோ ப்ரஸித்தியுடையது.

எம்பெருமான் தன்னால் மயர்வற மதிநல மருளப்பட்ட நம்மாழ்வாரது ஆராவமுதன் விஷயமான ஈடுபாடுகள் சொல்ல நிலமன்று; அறிவரிதே. முதலெடுப்பில் அநுபவ ரஸமென்னும் உவாமதராய், அவ்வநுபவ ரஸம் வெள் ளமிட்டன்றோ 'ஆராவமுதே'என்கிறார். லோகத்தில் எத்தனையோ ரிஷி களால் அநேக நாமங்கள் எம்பெருமான் விஷயமாய்க் கீர்த்தநம் பண்ணப்பட்

டிருப்பது கேளா நின்றோமிறே. இந்த ஆழ்வா ரொருவருக்கன்றோ அவன் போக்யதைக்குத் தகுதியானபடி ஸர்வநாமாந்தர விலக்ஷணமாய், அநந்யார்ஹ மாய், செவிக்கினிய செஞ்சொலினும் குழலின் மலியச்சொன்ன வோராயிரத் துள் இப்பத்தினும் இனியதாய், குழலூதுங்கால் கல்லும் நீராயுருகும், 'மரங் கள் நின்று மதுதாரைகள் பாயும்' என்ற கணக்கிலே த்ருடத்ரவ்யமும் த்ரவ த்ரவ்ய மென்னலாம்படி உருகும் வண்ணமன்றோ 'ஆராவமுதே' என்று அழைக்கத் தோன்றியது.

இந்தத் திருநாமத்தினுடைய போக்யதை தேசாந்தரஸ்தராய் பாஷாந் தரஸ்தராய் இருக்குமவர்களையும் ஈடுபடுத்து மென்கைக்கு ஓர் ஐயமில்லை. உத்தரபூமியில் லோகஸாரங்க மஹாமுனிகள் வர்த்தியாநிற்க, இங்குற்றையான் ஒருவன் அங்கேறச்செல்ல, 'பிள்ளாய்! தக்ஷிணபூமியில் விசேஷம் என்?' என்று கேட்க,' திருவாய்மொழி என்றொரு ப்ரபந்தம் அவதரித்துச்சிஷ்டர்கள் பரிக்ரஹித்துப் போரக்கொண்டாடிக் கொடுபோகா நின்றார்கள்' என்ன, 'அதிலே உனக்குப் போவதொரு சந்தை சொல்லிக்காணாய்' என்ன, 'ஆராவ முதே என்கிற வித்தனையும் எனக்குப்போ' மென்ன, 'நாராயணாதி நாமங்கள் கிடக்க இங்ஙனே ஒரு நிர்த்தேச முண்டாவதே' என்று அத்ருப்தராய், இச் சொல் நடையாடுகிற தேசத் தேறப் போவோமென்று அப்போதே புறப்பட் டுப் போந்தாரிறே.

ஆழ்வார்கள் எல்லாரிலும் இவ்வாழ்வார் மிகப்பெருமை வாய்ந்தவர். அப்படியே எல்லா ப்ரபந்தங்களிலும் இவர் ப்ரபந்தம் மேன்மை பொருந் தியது. அதிலும் சரம ப்ரபந்தமான திருவாய்மொழி உத்கர்ஷம் பெற்றது. அதிலும் பத்துப் பத்துக்கும் நடுநாயகம் போன்றது 'ஆராவமுதே'என் கிற திருவாய்மொழி. அவற்றிலும் இப்பாட்டு முதன்மை பெற்றது. அப்பாட் டிலும் முந்தறத் தோன்றிநிற்பது'ஆராவமுதே'என்னும் பதம். இப்படி யிவன் பெருமை சொல்ல நிலமன்று. 'மாலே-நெடுமாலே-உருகுகின்ற நெடுமாலே- கரைய வுருகுகின்ற நெடுமாலே-நீராயலைந்து கரைய வுருகுகின்ற நெடு மாலே' என்றிறே இவர் அநுபவக்ரமமிருக்கிறபடி. மேலும், 'உன்னாலல் லால் யாவராலுங் குறைவேண்டேன்' என்றும், 'தொழுவனேனை யுன தாள் சேரும் வகையே சூழ்கண்டாய்' என்றும் 'உனதருளே பிரியா வடிமை யென்னைக் கொண்டாய் குடந்தைத் திருமாலே! தரியேனினி' என்றும், 'உன் சரணந்தந்தென் சன்மங் களையாய்' என்றும், ப்ரார் த்தித்த விடத்திலும் அவன் செவிதாழ்த்தா திருந்தானாக நினைத்து, அவனிட்ட ஆணையான சரமச்லோகத்தை, அதாவது 'மாமேகம் ஶரணம் வ்ரஜ। அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்பதை நினைந்து 'நீயே விபவாவதாரத்தில் க்ருஷ்ணனாய் அருளிச்செய்த அர்த்தம்

அழகியதாகப் பெற்றேன், துன்பம் களைவாய், என் கஷ்டம் போக்குவாய்,களை கண்மற்றிலேன், "ஸுகிநுநொநூமதிঃ" ரக்ஷகாந்தரமுடையேனல் லேன், திருக்குடந்தை ரக்ஷகாந்தர ப்ரதிபத்தி நிவ்ருத்தி பிறந்தாரைச் சிதிலராம்படி பண்ணுமிட மென்கிற ப்ரஸித்தியை நிலை நிறுத்தி விட்டாயே" என்று இப்படிக் கூக்குரலிட்டார்.

இது கேட்ட அவனும் ஏது இவர் நம்மை ஒருபடியாலும் விடமாட் டார் போலிருக்கிறதே' என்று தன் திருவடிகளை உபாயமாகப்பற்றும் படியைக் காட்டித்தந்தார். அதைத்தான் மேல் 'இசைவித் தென்னையுன் தாளிணைக்கீழிருத்து மம்மானே!' என்றும் 'தீராவினைகள் தீரவென்னையாண்டாய்' என்றும் அவன் "ஸவபாவெஹெரா ஸொக்ஷயிஷ்யாமி" என்று பண்ணின ப்ரதிஜ்ஞையை ஸத்யமாக்கிற படியை இனிது அநுஸந்தித்து அவன் திருவடிகளையே தான் ப்ராப்ய ப்ராபகத்வேந அத்யவஸித்தமையை, "கழல்கள் அவையே சரணாகக் கொண்ட குருகூர்ச்சடகோபன்" என்று நிகமிக்கிறார். இவ்வைபவத்தை ப்ரதி ஸம்வத்ஸரம் மார்கழிமாதம் 15௳ திருவத்யயநோத்ஸவம் 15-ம் ஸேவை திருநாளில், 'திருமகள் மண்மகள் நீளை முதலாவெல்லாத் தேவியரும் தன்னுடனே' திகழ்ந்து நிற்கா' 'தன்னனைய சூரிகள் தன்னடிக் கீழ் வாழ ஸ்ரீஆராவமுதாழ்வான் சேஷபர்யங்கத்தில் பரமபத நாதனுப் வீற்றிருக்கும் பெரிய திருவோலக்கத்திலே ஆழ்வார் "ஆராவமுதே" என்று தொடங்கி, "களைவாய்துன்பம்" பாட்டளவாக அநுஸந்தித்துகொண்டு ஆராவமுதன் பரிஸரத்துக்கு எழுந்தருளி, "இசைவித் தென்னை" என்கிற பாசுராரம்பத்தில், பெருமாள் திருவடி தொழுவதை ஸேவித்தால் இப்பொழுதும் விசதமாய்க் காணலாம்.

இப்படி இவருடைய அபிமாநாதிசயத்தால் இவருடைய பக்தி அதிகரித்து அது ச்ருங்காரமாகப் பரிணமித்து, தானான தன்மையையும் இழந்து, பிராட்டிதசையை அடைந்து, அதிலும், 'இனி நாணித் தான் என்?' என்று முதிர்ந்த தசையை யுடையவராய், அவன் செய்த வற்றைச் சொல்லி அலற்றுகிறார் "தொல்லையம் சோதி" என்று.

"தொல்லையஞ்சோதிநினைக்குங்கால்
என்சொல்லளவன்றிமையோர்தமக்கும்
எல்லையில்லாதனகொப்பூழ்ச்செய்யும்
அத்திறம்நிற்கவெம்மாமைகொண்டான்
அல்லிமலர்த்தண்துழாயுந்தாரான்
ஆர்க்கிடுகோவினிப் பூசல்? சொல்லீர்
வல்லிவளவயல்சூழ்குடந்தை
மாமலர்க்கண்வளர்கின்றமாலே" [திருவாய்மொழி 8-2-6]

இப்பாசுரம் தமக்கு அத்யந்தம் அந்தரங்கைகளான தோழிகளைப் பார்த்துச் சொல்லுமதா யன்றோ இருப்பது. ஆனதால் தான் கண்டதை உள்ளது உள்ளபடியன்றோ சொல்லுகிறது?

[பாசுரார்த்தம்—பழமையாயும் அழகியதாயுமுள்ள தேஜஸ்ஸை உடையவன் என் வார்த்தையால் சொல்லத்தக்கவனன்று. இமைகொட்டாது பார்க்கும் தேவர்களுக்கும் அளவிறந்த ஸம்சயத்தை உண்டு பண்ணுநிற்கும். "நஸமர்த்தா ஸுராஸ் ஸ்தோதும் யந்நேத்ரஜம் விபும் । ஸர்வேவ தந்நேத்ரவந்யாம் கதம் யோஷித் கரிஷ்யதி ॥" என்கிறபடி அந்த உத்கர்ஷ மிருக்கச் செய்தே கொடிகளாலும் கழனிகளாலும் சூழப்பட்ட திருக்குடந்தையிலே ச்லாக்யமான தாமரைப் பூவை ஒத்த திருக் கண்கள் நித்ரை பண்ணுநின்ற அவன், என்னுடைய காந்தியை அபகரித்தான்; புஷ்பத்தோடு கூடிய சீதளமான திருத்துழாயையும் கொடுக்கிறானில்லை; அவனிப்படி நம்மைப் படுத்தின பின்பு மற்றொருவரைக் குறித்தோ ஆக்ரந்தநம் பண்ணுவது? சொல்லுங்கோள்.] நம்மைப் புகுற நிறுத்தி நலிந்தவன் வாசலிலே கூப்பிடாதே, ஏதேனு மொரு ஸம்பந்தமிலாதார் வாசலிலேயோ கூப்பிடுவதென்கிறாள். "கண்டாரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும் கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போ" விறே இவர்படியும். அதாவது ஆராவமுதனையே தஞ்சமாக அடைந்து அவனும் நம்முடைய பாரதிகளை ஏற்ற பின்பு நம் குறைகூற மற்ற வெம்பெருமான்களு முளரோ? என்றல்லவோ இவர் கருத்தாகத் தோன்றுகிறது.

இப்படி யெல்லா மிவர்க்குள்ள நிரதிசய மஹா விச்வாஸாதிகளாலே உபாயபூர்த்தி பெற்று அது பல பர்யந்த பர்யவஸாயியானமையை ஸ்வாநுபவத்திலும் நன்கு தெளிந்து, இவ்வளவிலும் ப்ரயாஸம் வேண்டாதே குடந்தையன் கோவலனுக்குக் குடியடியாராய் இருக்கு மிருப்பே நிரதிசயாநந்த பூர்வக பரிபூர்ண ப்ருஹ்மாநுபவரூப மோக்ஷ ஸாம்ராஜ்யம் பெறுகைக்கு ஸாதநம் என்பதை உட்கொண்டு, குடந்தையின் கோவலன் குடியடியார்க்கோ, அர்ச்சிராதி கதியில் மடந்தையர் வாழ்த்தலும், மருதரும் வசுக்களும் தந்தாம் எல்லை கடந்தும் தோத்திரம் சொல்லினரென்று அருளிச்செய்து, பின்னரே ப்ரபந்தத்தை நிகமித்தருளினரென்பதும் ஸம்ப்ரதாயாபிஜ்ஞர்கள் கொண்டாடும் விஷயமாகும்.

'செந்தமிழ் பாடுவார்' என்றும், 'இன்கவி பாடும் பரமகவிகள்' என்றும், 'பாட்டுக்குரிய பழையவர் மூவர் என்றும் கொண்டாடப்பட் டிருக்கிற முதலாழ்வார்களில் பூதத்தாழ்வாருடையதான,

"எங்கள் பெருமான்! இமையோர் தலைமகன்! நீ
செங்கண்நெடுமால்! திருமார்பா!—பொங்கு
படமூக்கி னாயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்
குடமூக்கில் கோயிலாக் கொண்டு." [இயற்பா: 2-ம் திரு. 97.]

என்ற ஸூக்தியும் இதுபோன்ற பேயாழ்வார் ஸூக்தியும் இவ் வெம்பெருமானைப் பரக்கப் பேசி அநுபவித்தது போற்றத்தக்கதே.

இவ்வண்ணம் ஏழு ஆழ்வார்கள் மங்களாசாஸநம் செய்தருளியது மன்றிக்கே, ஆழ்வார்திறத்து, 'தேவு மற்றறியே னென்ன மதுரகவி'போல் உள்ளன்பு வாய்ந்த கப்பநாட்டாழ்வாரும் இவ் வெம்பெருமான் கிடையழகைக் கண்டு அதிலாழ்ந்து

இடங்கொண்ட நெஞ்சத்திணங்கிக் கிடப்பன என்றும் பொன்னித்
தடங்கொண்ட தாமரைசூழும் மலர்ந்ததண் பூங்குடந்தை
விடங்கொண்ட வெண்பல் கருந்துத்தி செங்கண் தழலுமிழ்வாய்
படங்கொண்ட பாம்பணைப் பள்ளிக்கொண்டான் திருப்பாதங்களே.

[திருவெழுக்கூற்றிருக்கை]

என்று இவ் வழகு தன்னெஞ்சை விட்டு அகலாதிருக்க வேணு மென்று ப்ரார்த்தித்து இருக்கிறார். இந்தப் பாட்டு ப்ரபந்தத்தோடு படநபாடத்தில் இருந்து வருகிறதென்பதும் மிக ப்ரஸித்தியுடையதே.

இவைபோன்ற பெருமையுமன்றி மற்றைத் திவ்ய தேசத்தெம் பெருமான்கள் விஷயமாய் லுப்தமாய்ப்போன த்ரமிடச்ருதியை ஸ்ரீமந் நாதமுநிகள் முகமாய் ப்ரவர்த்திப்பித்து அவ்வெம்பெருமான்கள் பெருமைகளை எல்லோரும் அறியும்படி செய்வித்த மஹோபகாரத்தை நினைத்தால், நாதமுநிகள் தொடங்கி இன்றளவு முள்ளாரும் பின்புள்ளாருமான அபிஜ்ஞர்கள் ஆராவமுதன் விஷயத்தில் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களே யாவர். இப்படித் திவ்ய ப்ரபந்தத்தை ப்ரவர்த்திப்பித்து ஸம்ப்ரதாயத்தையும் ப்ரவர்த்திப்பித்த இந்த காரணத்தால் தான் ஸ்ரீமந் நாதமுநிகளும் இவைகளுக்கெல்லாம் நம்மாராவமுதனாலேயே அபிவ்ருத்தியென்று 'செல்வம் மல்குதென் திருக்குடந்தை'யில் மாத்ரம் மார்கழி௴ முதல் தேதி முதல் இருபத்தொரு நாளில் திருவத்யயந உத்ஸவத்தை இவ்விடத்தில் நம்மாழ்வாரை திருப்ரதிஷ்டை செய்வித்து ப்ரதி ஸம்வத்ஸரமும் நடக்கும்படி செய்வித்ததுமன்றி" இவ்வெம்பெருமானுக்கு "ஆராவமுதாழ்வான்" என்று திருநாமஞ் சாத்தினா ரென்பதும் எல்லாரும் அறிந்த விஷயமே.

இவ்வர்த்தத்தைக் கொண்டே இன்றைக்கும் அர்ச்சனையில் ஆவிர்பூத உபகாராய நம: என்று வழங்கப்பட்டு வருகிறது. ஆனதால்,

"தொண்டீர் எல்லீரும் வாரீர்
தொழுது தொழுது நின்றார்த்தும்."
"அண்டத்தின் முகடழுந்தவலைமுந்நீர்த் திரைததும்பஆவாதென்று
தொண்டர்க்கு மமரர்க்கு முனிவர்க்கு தானருளி உலகமேழும்
உண்டொத்த திருவயிற்றி னகம்படியில் வைத்தும்மை யுய்யக்கொண்ட
கொண்டல்கை மணிவண்ணன் தண்குடந்தை நகர்பாடி யாடீர்களே"

வஸ்யேச ஸாம்ப்ரதாய ஸாரஜ்ஞம் ஸதம்ஸ்வாம் வஸ்யாவித்திஹீதாஶ்ரித நாதயேயம் ।
ஸ்ரீ ஶார்ங்கபாணே நமனோத்ஸவேஷ்டு நிவ்யாஜகாருண்யநிதிம் ப்ரபத்யே ॥

ஓர் விஞ்ஞாபநம்.

ஸ்ரீ ஆராவமுதன் பெருமையைப் பலர் பலபடியாகப் பேசி இருந்தாலும் அவன் பெருமை பேசுவதில் ஸர்வ விதத்தாலும் அடியேனுக்கு யோக்கியதை இல்லையேயாகிலும், அவன் திறத்துள்ள காதல் அடியேனுக்குள்ள அநர்ஹதையையும் மறைத்து இவ் விஷயத்தில் அடியேனைத் தூண்டி விட்டபடியால், அதுபற்றி அடியேனும் ஸத்ஸம்ப்ரதாயா பிஜ்ஞர்களான முன்னோர்களுடைய உபதேசமுகத்தால் க்ரஹித்த சிலஅம்சங்களையே விஜ்ஞாபித்துக் கொண்டாலும் கூட புத்தி மாந்த்யத்தால் இதில் ஏற்பட்டிருக்கும் எல்லாக் குற்றங்களையும் மஹான்கள் பொறுத்தருளி அடியேனை அநுக்ரஹிக்கவேணுமாய் ப்ரார்த்தித்துக்கொள்ளுகிறேன்.

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், மவுண்ட்ரோட், மதிராஸ்.